S3

சுருக்கம்

கருணை அடிப்படையில் பணிநியமனங்கள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லையில் வரும் பணியிடங்களில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்தல் – திருத்தி அமைக்கப்பட்ட 18 கலங்கள் கொண்ட படிவம் மற்றும் முக்கிய சான்றுகளை மட்டும் தேர்வாணையத்தின் இசைவிற்கு அனுப்புதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை

025680
24 மார் 2014
சென்னை-600 006

அரசாணை (நிலை) எண்.235 நாள் 26.09.2013.

விஜய, புரட்டாசி–10,

திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது

1. அரசுக் கடித (நிலை) எண். 31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25.02.1994.
2. அரசுக் கடித (நிலை) எண். 2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.01.2006.
3. அரசு கடித எண்.19205/க்யூ.1/2010–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.2010.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1317/சிடி–சி3/2012, நாள் 18.03.2013.

---

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவருடன் 30.07.1993–ல் நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தற்காலிகமாக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை, தேர்வாணையத்தின் இசைவு பெற்று வரன்முறைப்படுத்த, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்படும் முறைப்படுத்தப்பட்ட படிவம் 17 கலங்கள் கொண்ட படிவமாக எளியமுறையில் உருவாக்கப்பட்டது.

2. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 17 கலங்கள் கொண்ட முறைப்படுத்தப்பட்ட படிவத்தில் கலம் 8–க்கு கீழே கலம் 9 இணைக்கப்பட்டு, 18 கலங்கள் கொண்ட முறைப்படுத்தப்பட்ட படிவமாக மாற்றப்பட்டது.

த.பி.பா.

3. மேலே, நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தற்காலிகமாக கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த, அவர்கள் பணியமர்த்தப்படுவதற்கு முன், பணி நியமன அதிகாரிகளால் பெறப்பட்ட பின்வரும் சான்றிதழ்களுடன் அரசு மூலம் தேர்வாணையத்தில் சரியாக பெறப்படும் கருத்துருக்களுக்கு, அத்தகையவர்களின் பணிவரன்முறை செய்யப்பட ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16 (பி) பிற்பகுதியின்படி தனது இசைவினை வழங்கி வருகின்றது என்று தெரிவித்துள்ளது:-

1. கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் கடிதம்
2. 18 கலம் கொண்ட படிவம் (அசல்)
3. விண்ணப்பதாரரின் உறுதிமொழிச் சான்று (அசல்)
4. காலஞ்சென்ற அரசு ஊழியரின் இறப்பு சான்றிதழ் (அசல்)
5. காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசுச் சான்றிதழ் (அசல்)
6. விண்ணப்பதாரருக்கு பணி நியமனம் அளிக்கப்படுவதில் ஏனைய வாரிசுதாரர்களின் மறுப்பின்மைச் சான்றிதழ் (அசல்)
7. அரசு ஊழியரின் குடும்பத்தில் வேறு எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணியில் இல்லை என்பதற்கான சான்றிதழ் (அசல்)
8. வறிய நிலைச் சான்று (அசல்)
9. குடும்ப வருமானச் சான்றிதழ் (அசல்)
10. குடும்ப சொத்து சான்றிதழ் (அசல்)
11. நிர்ணயிக்கப்பட்ட கல்விச் சான்றிதழ்கள் (அசல்) மற்றும் பிறந்த தேதிக்கான சான்று (அசல்)
12. கல்விச் சான்றுகள் மெய்த்தன்மை அறியப்பட்டதற்கான கடிதம் (அசல்)
13. அரசு ஊழியரின் மனைவி/கணவர் நியமன நாளில் மறுமணம் புரியவில்லை என்பதற்கானச் சான்று (அசல்)
14. காலஞ்சென்ற அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் சான்றொப்பமிடப்பட்ட நகல்
15. அரசு ஊழியரின் பணியேற்பு நாளினை அறியும் பொருட்டு அன்னாரின் பணிப்பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல்.

..... 3 ...

மேலும், அவ்வாறு அரசினால் அனுப்பி வைக்கப்படும் கருத்துருக்கள் சிலவற்றில் மேற்கண்ட சான்றிதழ்கள் அனைத்தும் முழுமையாகப் பெறப்படுவதில்லை. அவ்வாறு பெறப்படாத சான்றிதழ்களை அனுப்பி வைக்குமாறு அரசிடம் கோரப்பட்டு, அவற்றை துறை தலைவர்களிடமிருந்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டு, சான்றிதழ்கள் பெறுவதற்கு அதிக காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வாறு பெறப்படும் சில கருத்துருக்களில் மேற்கண்ட சான்றுகள் துறை தலைவரால் முழுமையாக அனுப்பி வைக்கப்படாததால், தேர்வாணையத்தில் அதிக அளவிலான கோப்புகள் தேக்க நிலையில் உள்ளன. இவ்வாறான நிலையில் அதிக அளவிலான நிலுவையினை குறைக்கும் பொருட்டும், தேர்வாணையத்தின் இசைவினை விரைந்து வழங்க பின்வரும் மூன்று சான்றுகள் அவசியமான சான்றுகள் ஆகும்:-

1. காலஞ்சென்ற அரசு ஊழியரின் இறப்பு சான்றிதழ் (அசல்)
2. காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசு சான்றிதழ் (அசல்)
3. கருணை அடிப்படையில் எந்த பதவியில் நியமனம் செய்யப்படுகிறதோ அந்த பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிச் சான்றிதழ் (அசல்) மற்றும் பிறந்த தேதிக்கான சான்று (அசல்)

எனவே, கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு தேர்வாணைய இசைவு வழங்குவது தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட முக்கிய சான்றுகளுடன் 18 கலங்கள் கொண்ட படிவமானது சம்பந்தப்பட்ட துறையின் அரசுச் செயலாளர் அவர்களின் கையெழுத்து மற்றும் அலுவலக முத்திரையுடன் அனுப்பப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், இதற்கேற்ப மாதிரி படிவத்தை உரிய முறையில் திருத்தியமைக்க பரிசீலனை செய்யுமாறும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. தேர்வாணையத்தின் பரிசீலினைக்கு இதுநாள்வரை அனுப்பப்பட்டுவரும் 18 கலங்கள் கொண்ட படிவத்தில், கலம் 17–ல் கீழ்க்காணும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி/கணவர் வாரிசுதாரருக்குப் பணி நியமனம் கோரி விண்ணப்பித்த கடிதம்
2. கருணை அடிப்படையில் எந்த பதவியில் நியமனம் செய்யப்படுகிறதோ அந்த பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிச் சான்றிதழ் (அசல்) மற்றும் பிறந்த தேதிக்கான சான்று (அசல்)
3. அரசாணை (நிலை) எண். 29, வேலைவாய்ப்புத் துறை, நாள் 07.03.1988–ன்படி அளித்த விண்ணப்பதாரரின் உறுதிமொழி
4. இறந்த அரசு ஊழியரின் இறப்புச் சான்றிதழ்
5. வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றிதழ்

..... 4 ...

6. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கான வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஒருங்கிணைந்த சான்றிதழ்

7. இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் உள்ள இதர வாரிசுதாரர்களின் மறுப்பின்மைச் சான்றிதழ்

தற்போது, தேர்வாணையத்தின் கருத்தின் அடிப்படையில், 18 கலங்கள் கொண்ட படிவத்தில், கலம் 17–ல், கீழ்க்காணும் ஆவணங்கள் மட்டுமே இணைக்கப்பட வேண்டும் என்று திருத்தி அமைத்து,

1. காலஞ்சென்ற அரசு ஊழியரின் இறப்பு சான்றிதழ் (அசல்)

2. காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசு சான்றிதழ் (அசல்)

3. பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டவாறு, தனியரது கல்வித் தகுதிச் சான்று (அசல்) மற்றும் பிறந்த தேதிக்கான சான்று (அசல்)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லையில் வரும் பதவிகளில், தற்காலிகமாக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த அரசுக் கடித எண். 19205/க்யூ.1/2010–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.2010–ல் தெரிவிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று, அதன் மீது உரிய துறைகளின் கருத்துக்களையும் பெற்று அரசளவில் ஆய்வு செய்த பின்னர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16 (பி) உட்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை கோரும் கடிதத்துடன், துறைச் செயலாளர் அவர்களின் பரிந்துரை, கையொப்பம், அலுவலக முத்திரையுடன் கூடிய திருத்திய 18 கலம் கொண்ட முறைப்படுத்தப்பட்ட படிவத்தினையும் சேர்த்து அனுப்புமாறு அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்/துறைத் தலைமை அலுவலர்கள்/அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரை கேட்டுக் கொள்ளலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. (திருத்திய 18 கலம் கொண்ட முறைப்படுத்தப்பட்ட படிவம் இணைக்கப்பட்டுள்ளது)

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
ஆணையர், நில நிர்வாகத் துறை, சென்னை–5.

ஆணையர், நிர்வாக வருவாய்த்துறை, சென்னை–5.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104/ மதுரை.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–32
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
மாநிலக் கணக்காயர், சென்னை–18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ அனைத்து கருவூல அலுவலர்கள்.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9
அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை–9

நகல்
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

க. வைகுண்ட 27/9/13

பிரிவு அலுவலர்.

# ANNEXURE

1. Particulars of Applicant.

| | | | |
|---|---|---|---|
| 1 | Name of the applicant | : | |
| 2 | Date of application for appointment(only one dependant in the family can be provided appointments on Compassionate grounds). | : | |
| 3 | His/Her relationship to the deceased Government Servant | : | |
| 4 | Date of birth and age (the age of wife or husband/son or unmarried daughter should not be more than 35 years respectively on the date of death of Government Servant) In the case of widow/widower the upper age limit is 50 years) | : | |
| 5 | Qualifications. | : | |
| 6 | Name of the post for which his/her name is recommended/for appointment and the service in which it is included (compassionate appointment should be given only to the lowest category of the service concerned) | : | |
| | Whether the post is with in the purview of the Tamil Nadu Public Service Commission | : | |
| | Whether the candidate is fully Qualified for the post (If not, state the rules to be relaxed) | : | |
| | The date of temporary appointment of the candidate(Extract from Service Register to be enclosed) | | |
| | **II. PARTICULARS OF DECEASED GOVERNMENT SERVANT** | | |
| | Name and designation of the deceased Government Servant | : | |
| | Office where he/she worked at the time of death | : | |
| | Whether he/she held the post (name of the post to be specified) in regular capacity (i.e probationer or approved probationer or full member) | : | |

| | | | |
|---|---|---|---|
| 13 | Date of Death/Date of retirement on medical invalidation. | : | |
| | **III.GENERAL** | | |
| 14 | Details of all the family members: | | |

| Name | Age | Educational qualifications | Marital status | Relationhip to the deceased | Employed/ unemployed(If employed, particulars) |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |

| | | | |
|---|---|---|---|
| 15 | Monthly Income by way of Family Pension and other similar sources | : | |
| 16 | Details of immovable property like houses lands etc. owned by the family and the monthly income derived therefrom | : | |
| | **IV. CERTIFICATES/PARTICULARS TO BE FURNISHED** | | |

| | | |
|---|---|---|
| 17 | i) | Death Certificate of the deceased Government Servant (Original) |
| | ii) | Legal heirs certificate of the deceased Government Servant (Original) |
| | iii) | Certificates relating to educational qualification and date of birth (Original) |

SIGNATURE OF THE
APPOINTING AUTHORITY

| | |
|---|---|
| 8 | Recommendation of the Administrative Department concerned in the Secretariat<br><br>N.B:<br>i) The term 'near relative' is defined and restricted to include only the wife/ husband/ son/ unmarried daughter/ adopted son/ adopted unmarried daughters/ widows/ divorced or deserted daughter of the Government Servant who dies in harness and unmarried brothers/ unmarried sisters in case of the unmarried Government Servant who dies in harness |

ii) Candidates seeking employment should possess all the prescribed qualification for the post concerned and that these conditions should not be relaxed.

iii) Dependants of the temporary Government Servants appointed under rule 10(a)(i) of the General Rules for the Tamil Nadu State and Subordinate Service who dies in harness are not eligible to be considered.

iv) Dependants of the Government Servant, who die after retirement are not eligible to be considered.

v) Dependants of Government Servant who die in harness can be considered for appointment on compassionate grounds irrespective of the presumptive date of superannuation of the deceased Government Servant.

vi) Even if one member of the Family other than the deceased Government servant was employed even before the death of the Government servant and was living separately without extending any help to the family, then the case of other eligible dependants may be considered.

Mohan Pyare,
Principal Secretary to Government

//True Copy//

27/9/13
Section Officer.